**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:- திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), குளித்தலை,**

**2024 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 10 ஆம் நாள் திங்கள்கிழமை**

**I.A.No.07/2024 In O.S.No.62/2012**

1) ஜெய்ப்பூன் பீபீ (இறப்பு)

2) பர்வீன்

3) யு.ஆ.து.ரபீக் பாஷா

4) அம்மு

.... மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிராக//**

1) மைமூன் பீபீ (இறப்பு)

2) சுலைமான் மற்றும் 19 நபர்கள்

.... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என் முன்பாக 04.06.2024 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.M.சிவக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 மற்றும் 8 முதல் 19 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.மலர்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 7 ம் எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.K.S.M.சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும், 5, 6 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகக் கொண்டும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

வா.சா.1 ஐ மீண்டும் விசாரிக்க அனுமதியளிக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்</u>**

(1) மனுதாரர் இவ்வழக்கின் 2ம் வாதி. அவருக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் இறந்த பின்பு அவர்களது வாரிசுகளை வழக்குரையில் சேர்த்துள்ளதாகவும், மேலும் 5 முதல் 7 பிரதிவாதிகளையும் வழக்குரையில் கூடுதலாக சேர்த்துள்ளதாகவும், எனவே அவர்கள் குறித்த சங்கதிகளை பொறுத்து இவ்வழக்கில் கூடுதலாக சாட்சியம் அளிக்க வேண்டியது அவசியம் என்றும், எனவே தன்னை மீண்டும் விசாரிக்க அனுமதியளிக்குமாறு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**(2) இவ்வழக்கில் 7ம் எதிர்மனுதாரரும், 20ம் எதிர்மனுதாரரும் தங்கள் தரப்பில் எதிருரை இல்லை என குறிப்பாணை தாக்கல் செய்துள்ளனர்.**

**<u>2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 8 முதல் 19 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**

(3) இம்மனுவில் மனுதாரரை மீண்டும் அழைக்க உரிய சட்டப்பிரிவு இருந்தபோதும் மனுதாரர் பிரிவு 151 கு.வி.மு.ச பிரிவின் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல. வா.சா.1 சாட்சிய வாக்குமூலம் அளித்துவிட்ட நிலையில் 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி இறந்த போனதை காரணமாக கூறி கூடுதல் வாக்குமூலம் அளிக்க அவசியம் இல்லை. ஏற்கனவே வழக்கு சொத்தை பொறுத்தும், மனுதாரர் தனது உரிமையை பொறுத்தும் முழுமையாக விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டார். உரிமை மற்றும் அனுபவம் பொறுத்தும் எவ்வித மாறுபடாத சங்கதிகளை பொறுத்தும் வா.சா.1 ஐ மீண்டும் சாட்சியம் அளிக்க அனுமதி கோருவது ஏற்கத்தக்கதல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்து 12 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இம்மனுவை அனுமதிக்க முகாந்திரம் எதுவும் இல்லை. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

(4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் இவ்வழக்கில் தனது தரப்பு சாட்சியம் முடிந்த பின்பு கூடுதலாக பிரதிவாதிகளை சேர்த்திருப்பதாகவும், அவர்களை பொறுத்து சாட்சியம் அளிக்க வேண்டுமென்றும் வாதிட்டார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி சங்கதிகள் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால்

மனுதாரர் தனது முதல் சாட்சியத்திலேயே அனைத்து சங்கதிகளையும் கூறிவிட்ட நிலையில் கூடுதலாக சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என ஆட்சேபனை கூறியுள்ளனர். விசாரணை நீதிமன்றமான இந்நீதிமன்றத்தில் மனுதாரர்கள், பிரதிவாதிகள் குறித்த அனைத்து சங்கதிகள் குறித்தும் சாட்சியம் அளிக்க வாய்ப்பு வழங்கப்படாவிட்டால் மனுதாரர்களால் தங்களது தரப்பை நிரூபிக்க இயலாமல் போய்விடும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்குவதால் எதிர்மனுதாாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024 ம் ஆண்டு ஜுன் திங்கள் 10 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2024.06.10 16:39:23 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),**

**குளித்தலை.**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும்சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2024.06.10 16:39:28 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),**

**குளித்தலை.**